கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை

223

மார்கழி 20.12.2023


ஆவணச்சிறப்பிதழ்

# ஜீவநதி

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்

100/-

## இடர் காலக் கவிதைகள் சிறப்பிதழ்



02 MAR 202

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவநதி

-கலை இலக்கிய மாத சஞ்சிகை-

ஆவணச் சிறப்பிதழ்

2023 மார்கழி இதழ் - 223


அறிஞர் தம் இதய ஒடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
- பாரதிதாசன்-


**பிரதம ஆசிரியர்**

க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**

வெற்றிவேல் துஷ்யந்தன்

ப.விஷ்ணுவர்த்தினி

**பதிப்பாசிரியர்**

கலாநிதி த.கலாமணி

**தொடர்புகளுக்கு .**

கலை அகம்

சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி

அல்வாய் வடமேற்கு, அல்வாய்

இலங்கை.

**ஆலோசகர் :**

திரு.கி.நடராஜா

**தொலைபேசி :**

0775991949, 0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**

K.Bharaneetharan

Commercial Bank, Nelliady

A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.


# பொருளடக்கம்


1. தமிழினி
2. அம்புலி
3. கஸ்தூரி
4. கௌதமி
5. வலம்புரி
6. தூயவள்
7. நா.நாமகள்
8. செந்தணல்
9. சுதாமதி
10. ஆலையிசை
11. தமிழவள்
12. விண்ணரசி
13. சோழநிலா
14. மாதவி
15. [illegible] கானவி
16. புரட்சிநிலா
17. பொன்னிலா
18. புதியவள்
19. சமர்விழி
20. உதயலட்சுமி
21. மலைமகள்
22. பாரதி
23. அநாமிகா
24. கிருபா
25. பல்லவி
26. பிரபா அன்பு
27. உலகமங்கை
28. வானதி
29. வெற்றிச்செல்வி
30. தமிழ்க்கவி


ஜீவநதியின் 2023 ஆம் ஆண்டுக்கான 12 ஆவது ஆவணச் சிறப்பிதழாக 30 பெண் படைப்பாளிகளின் இடர்காலக் கவிதைகள் இவ்விதழில் வெளி வருகின்றது. இந்த படைப்பாளர்களில் பெரும்பாலானவர்கள் போராட்டக் களத்தோடு தொடர்புடையவர்கள். அவர்களது மனதில் தோன்றிய உணர்வலைகளை கவிதைகளாக்கி எங்கள் உணர்வுகளுக்குள் கொண்டு சேர்த்துள்ளார்கள். எமது வலி, எமது போராட்டம், நாளைக்கான ஏக்கம், பிரிவு, வீரம் என பலவகைப்பட்ட சுவையையும் இக்கவிதைகள் வெளிப்படுத்து கின்றன. நாம் சுகந்திரமாக வாழ வேண்டும் என்பதற்காக எவ்வளவோ தியாகங்களைச் செய்து தம் வாழ்க்கையை அர்ப்பணித்த இந்த பெண் கவிஞர்களுக்கு சிறு நன்றிக் கடனாக இச்சிறப்பிதழை வெளியிட்டு மகிழ்கின்றோம். இவற்றை விட இன்னும் பல கவிஞர்கள் குறித்த காலப்பகுதியில் பல கவிதைகளை எழுதியிருக்கிறார்கள். அவர்களது கவிதைகள் சில தொகுப்புகளிலும் இடம் பெற்றுள்ளன. இம் முயற்சியும் ஒரு முன் முயற்சியாக அமைவதே.

2023 ஆம் ஆண்டு ஜீவநதி வெற்றிகரமான 36 இதழ்களை வெளியிட்டுள்ளது. முதன் முதலாக ஈழத்து இலக்கிய வரலாற்றில் ஒரு ஆண்டில் 36 சஞ்சிகைகளை வெளியிட்ட பெருமை ஜீவநதியையே சாரும். முடியாதது என்று எதுவுமில்லை. இந்த ஆண்டு வெளியான 12ஆவணச் சிறப்பிதழ்களும் வாசகர்களிடையே பெரு விருப்பை ஏற்படுத்தின. வாசகர்களுக்கு எமது நன்றிகள். எல்லா வற்றிற்கும் மேலாக இந்த 12 இதழவருகைக்கும் முன்னின்று உதவிய அன்பு நண்பரும் அண்ணனுமாகிய தி. கோபிநாத் அவர்களுக்கு என் அன்பான நன்றியையும் மதிப்பையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

-க. பரணீதரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பலகாமப் பெருங்காட்டின் போர்க்களத்தில்

தமிழினி

போருக்கு புதல்வரைத் தந்த
தாயாக
வானம் அழுது கொண்டேயிருந்தது.
வெடியதிர்வுகளின்பேரோசைகளால்
குடிபெயர்ந்தலையும்
யானைக் கூட்டங்களாய்
இருண்டமுகில்களும்கூட
மருண்டு போய்க் கிடந்தன.
பகலை விழுங்கித் தீர்த்திருந்த
இரவின் கர்ஜனை
பயங்கரமாயிருந்தது
அம்பகாமப் பெருங்காட்டின் போர்க்களத்தில்

காதலுறச் செய்யும் கானகத்தின்
வனப்பை
கடைவாயில் செருகிய
வெற்றிலக்கு தப்பலாக
சப்பிக் கொண்டிருந்தது
யுத்தம்.

மீளாப்பயணம் சென்ற தோழி
விடைபெறக் கைப்பற்றி
திணித்துச்சென்ற கடதாசி
செய்தி சொன்னது...
காலமாவதற்காய்காத்திருக்கும்
அம்மாவின்ஆத்மா
கடைக்குட்டியவளின்கையால்
ஒரு துளி உயிர்த்தணிக்காய்
துடிக்கிறதாம்...

எவருக்கும் தெரியாமல்
என்னிடத்தில்
குமுறியவள்
விட்டுச் சென்ற
கண்ணீர்க்கடலின்
நெருப்பலைகளில்
நித்தம்
கருகிக் கரைகிறது
நெஞ்சம்.

தனிமனித
உணர்ச்சிகளின் மீதேறி
எப்போதும்
உழுதபடியே
செல்கின்றன
போரின்
நியாயச்
சக்கரங்கள்

அக்கணத்தில்
பிய்த்தெறியப்பட்டிருந்த
பச்சை மரங்களின்
இரத்த வீச்சத்தை
நுகர்ந்த வல்லூறுகளின்
நீண்ட நாக்குகளில்
உமிழ்ந்து

பெருகுகிறது
வெற்றிப் பேராசை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் எப்பொழுதும் மரணிக்கவில்லை

அம்புலி

யுதத்ம் எனக்குப் பிடிக்கவில்லை.
குண்டு மழைக்குளிப்பில்
குருதியுறைந்த வீதிகளில்
நிணவாடை கலந்த
சுவாசிப்புக்களில்
வெறுப்படைகிறேன்.
நரம்புகள் அறுந்து,
தசைகள் பிய்ந்த
மனிதர்களின்
கோரச் சாவு கண்டு
என் மனம் குமுறுகின்றது.
துப்பாக்கி
முழக்கத்திடையே
விழித்துக்கொள்ளும்
ஒவ்வொரு
காலையையும் - என்னால்
இரசிக்க முடியவில்லை.
வசந்தம் கருகிப்போன
வருடங்களாய்
விரிந்துள்ள எம் வாழ்வு

எப்பொழுதும்
யுத்தம் எனக்குப்பிடிப்பதில்லை
ஆயினும் அதன் முழகத்தினிடையே நான்
காலம் நிர்ப்பந்தித்ததில்
எனது கோலம் மாற்றமடைந்தது.
சிவந்து கனியும்சுடுகலன் குறிகாட்டியூடே
குண்டுகளின் அதிர்வோசை கேட்காத
ஒரு தேசத்தை இங்கே தேடுகிறேன்
வெறிச்சோடிப்போன வீதிகளிலும்
முட்புதர் படர்ந்த வயல்களிலும்
மீண்டும் குதூகலம் கொப்பளிக்க
ஒரு மயானத்திலிருந்து
மீட்டெடுக்கப்பட்ட
மகிழ்வோடு பூரிக்கும் - என்
தேசத்தைத்தேடிக் கால்கள்
விரைகின்றன.
ஆயினும் ஒரு வண்ணாத்துப்பூச்சியின்
சிறகடிப்பில் எனை மறக்கவும்
ஒரு குழந்தையை மென்மையாகத்
தாலாட்டவும் என்னால் முடியும்.

குளத்தடி மரநிழலில்
எனது புல்லாங்குழலைத் தழுவும் காற்றோடு
கதைபேச நான்தயார்.
நிம்மதியான பூமியில்
நித்திரை கொள்ள
எனக்கும் விருப்புண்டு.

எனது மரத்துப்போன
கரங்களுள் பாய்வது
துடிப்புள்ள இரத்தம்
வெறும் இடியும் முழக்கமல்ல நான்.
நான் இன்னமும்
மரணிக்கவில்லை
எப்பொழுதும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லரசுகள்

கஸ்தூரி

வல்லரசுகளே
நீங்கள்,
வாழ்வதற்காக
வாழ்பவர்களை
வதைப்பவர்கள்.

உங்கள் வல்லமைகள்
ஆய்வு செய்யப்படுகையில்
வளர்முகநாடுகளே
வாழா வெட்டியாகின்றன.
நீங்கள் நிலவில்
வரலாறு படைக்க
மண்ணை
மானபங்கம் செய்பவர்கள்.

வறுமையும் பிணியும்
உங்கள்
வருகையால் பிணியும்
வளர்க்கப்படுபவை.

உங்கள்
தேசத்து
செஞ்சிலுவைச் சங்கங்களும்
சேதங்களைச் சேகரிப்பதில்லை;
இருப்புக்களையே
எண்ணிப் பார்க்கின்றன.

உங்கள் நாட்டுக்
கணக்காய்வாளர்கள்
இறப்புக் கணக்குகளை
இருப்புப் பக்கத்தில்
பதிந்து காட்டும்
பட்டதாரிகள்.

உங்களோடு
சம்பந்தம் செய்து கொண்ட
சமாதான நாடுகள்
இங்கு
பிரசவித்துக் கொண்டது
பிரச்சினைகளைத்தான்

உங்கள்
விமான நிலையங்கள்
விஸ்தரிக்கப்படுகையில்,
எங்கள்
குடிசைகள்அல்லவா
கொளுத்தப்படுகின்றன!

சமாதான நாடுகளில்
சாமர்த்தியமாய் நுழைந்து
ஆணி வேரை
அறுத்துவிட்டு
வாடாது நிற்க
நீர் ஊற்றுபவர்கள்.

உங்கள்
தலையீடுகளால்
தரைமட்டமாகிப் போன
தேசங்களே
அதிகம்.

நீங்கள் பரவிய
எயிட்ஸ் இங்கே
இயற்கையானதல்ல
என்ற பின்பு,
காற்றும் மழையும் கூட
சந்தேகப்படுகின்றன.

நாளைய செயற்கைப் புயலுக்கு
சொந்தம் கொண்டாடப் போகும்
சர்வதேசப்
பயங்கரவாதிகள் நீங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை நிலம்

## கௌதமி

அம்மா!
மன்னித்துவிடு
இப்படிச் சொல்ல
எனக்கு விருப்பமில்லை.
ஏனெனில் ஒரு குற்றவாளியாகப்
பிரியவில்லையே நான்.
அப்படியாயின் - என்னை
மறந்துவிடு.
அப்படிச் சொல்ல
எனக்கு அருகதையில்லை.
நினைக்கும் உரிமை உனக்கேயானது!

அம்மா உனக்கு
உறக்கமே வருவதில்லையா?
எனக்காக ஏன் விழித்திருக்கிறாய்?

நீயோ - என்னைமட்டுமே நேசிக்கிறாய்.
நானோ -தேசத்தை நேசிக்கிறேன்!

என்றும் போல்
வாசலில் நின்று
வழியைப் பார்த்து
நீ என்
வருகையைத் தேடுவாய்
என்னைப் போன்று
பலர் வீதியில்
போகலாம், வரலாம்.
அவர்களில் என்னைப் பார்
இதேபோல்

எங்கோ ஒரு தாய்
என்னில் தனது
குழந்தையைக் காணலாம்.

அம்மா
என் புத்தகங்களும்
கொப்பிகளும்
மேசையில் இருக்கின்றது.
கவனமாக எடுத்து வை.
சிலவேளை அதுவே
என்
ஞாபகச் சின்னமாகலாம்!
அக்காவின் பிள்ளைக்கு
நீ எனக்கு
முன்பு வாங்கித் தந்த
விளையாட்டுத் துவக்கை
என் சார்பில்
கொடுத்துவிடு.
அவன் அதை
கையாளப் பழகட்டும்!

அம்மா!
அழுகின்றாயா வேண்டாம்.
நான்
மீளவில்லையெனில்
என் படத்துக்கு ஒரு
முத்தம் கொடுப்பாயல்லவா...
ஏனெனில் என்றுமே நான்
உனக்கு குழந்தைதான்!

பிறந்த மடியைப் பிரிந்த போதும்
தவழ்ந்த மண் - என்னைத்
தழுவிக் கொள்ளும்.
மண் மடியில் - என்னை
வைத்து நில அன்னை
தாலாட்டுப் பாடுவாள்.

பாலில் வீரம் ஊட்டிப்
பருகிய தாயே,
என்
புனிதப் பாதை தவறேன்.
நீயே யோசி.

காலம் உதிரும்.
கண்ணீர் மறையும்.
வரலாறாய் என்
வாழ்வு தொடரும்!

உனக்கும் எனக்கும்
உள்ள உறவு
தொப்புள் கொடியுடன்
அறுந்து போக
எந்தன் உறவோ
புதைகுழி வரையும்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சுப் பாதம் மெல்லப் பதித்து

- வலம்புரி -

புல்லின் நுனியில்
படிந்தன பனித்துளிகள்
சிலிர்த்துப் போயின
தொட்டுப் போனது என்ன
தென்றல் கற்றோ...?
தமக்குள்ளே
கிசுகிசுத்துக் கொண்டன.

உயர்ந்த மரத்தின்
உதிர்ந்துபோன சருகுகள்
மெல்லச் சிரித்தன.
தடவிப் போனது என்ன
பஞ்சுப் பொதியோ...?

ஆற்றோர மணற்கரைகள்
எக்காளம் கொண்டன.
தாம் அழகு கொண்டனவாம்
பதிந்து போன
சின்னஞ்சிறிய
பாதச் சுவடுகளால்.

இவர்கள் தடங்கள்
அவை
மெல்லெனப் பதிந்தாலும்
ஆழமானவை...
அழிக்க முடியாதவை.

சின்னஞ்சிறிய தோள்களில்
ஏ.கே. சுமக்கும் இயேசுநாதர்கள்
தோள்கள் மட்டுமா
புண்ணாகிப் போனது?

உயர்ந்த உன்னத...
கொள்கையைச் சுமந்தவர்
இதயமும் தான்
நொந்து போனது.

இன்னமும்
மெல்லிய இதயம்
மென்மையாய் புன்னகைக்கும்
இவள்
தன்னை நேசிக்கத் தெரிந்தவள்
தாய் மடியை மறக்க முன்னமே
தாய் மண்ணைநினைக்க தொடங்கியவள்

இன்னமும் பால் மணக்கும்
அவள் வாயில்
சொல்லுக்கு பஞ்சம்.
எனினும்...
இவள் பெயர் சொன்னாலே
ஒரு கூட்டம் அஞ்சும்.

இருண்ட இரவுகளில்
விடியாத பொழுதுகளில்
காடு மேடுகளில்
கடற்கரையோரங்களில்
நிமிர்ந்த உருவமொன்று
விறைத்து நிற்கும்
ஓ!

அது இவள்தானா!
வெளுத்துப் போன உதடுகளில்
அழுத்தி வைத்த புன்னகையுடன்
ஒளிரும் விழிகளில்
தேக்கி வைத்த சிந்தனையுடன்
பஞ்சுப் பாதங்கள் மெல்லப் பதியும்.

பேயுறங்கும் வேளைகளில்
போர் முனைகளிலே
கவிழ்ந்து போகும்
இமைகளை இழுத்து நிறுத்தி
அருள வைக்கும்
இருள்களையே உற்று நோக்கி
சடசடத்து ஓயும்
இவள் துப்பாக்கி;
விடியலில்
உடனிருந்த தோழியின்
மரணம் கண்டு
பனித்துப்போகும் விழிகள்
துடிதுடிக்கும் இதயம்,
அவள் வாய்
அழுவதற்கு ஆயத்தமாய்
சற்றே நெளியும்
எல்லைப் புறக் கிராமத்தில்
எதிரியைத் தேடும்.
மீண்டும் விறைத்த தோள்களும்
அழுத்திய உதடுகளும்
அசைக்கவே முடியாத அவள்
மன உறுதியைச் சொல்லும்.
களங்களிலே
அவள் பயணம் தொடரும்...
பஞ்சுப் பாதம் மெல்லப் பதித்து.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்கும் புரிகிறது

தூயவள்

அதோ! அங்கே அந்த ஆலமரம்
நானும் நீயும் குந்தி யிருந்து
நாளாந்தம் வம்பு பேசும் இடம்
அது அப்படியே இருக்கிறது!

இதோ இந்தத் "தின்னவேலித்" தெரு
இதில் தானே நானும் நீயும்
கை கோத்து கதை பேசித் திரிந்தோம்.....!

இன்றும் கூட ......
இந்தத் தெருவில் இதோ நான்
இரு சக்கர வண்டியில்.....

ஆனால் .....
இன்று கூடவே வந்து
தோளில் கைபோட்டு கேலி பேசிச்
சிரிக்க நீ மட்டும் இல்லை....

எல்லாமே....
அந்த நீல வண்ணம் மின்னும்
உனக்குப் பிடித்த வானம்....
ஈழத்து மண்வாசனை மணக்கும்
நீ மிகவும் நேசித்த இந்தப் பூமி...!

தனக்கேதும் தடைகள் இல்லாததால்
சுதந்திரமாய் எம்மைத் தொட்டு
சுகம் விசாரிக்கிறது
என்று நீ கூறும் காற்று...

இவை எல்லாமே
இங்கு அப்படியே இருக்க

என் அருமை நண்பா!
நீ மட்டும்
ஏனோ நீ மட்டும்
இங்கு இல்லை!

உனது முகத்தை மட்டும்
நான் காண முடிய வில்லை
நீ எங்கே சென்று விட்டாய்?

அதோ ! அங்கே ஒரு சுவர்
அதில் ஒரு வாசகம்...
உனது முகம்...
இல்லை! இல்லை! படம்...
இப்போது தெரிகிறது....

ஓ ! நீ சுதந்திரத்திற்கு ஒரு
அர்ச்சனை மலராக
அர்ப்பணிக்கப் பட்டு விட்டாயா?
எனக்கும் ஏதோ புரிகிறது போல
இருக்கிறது...... நண்பா!

அதோ! அங்கே அந்த ஆலமரம்
இதோ! இங்கே இந்தத் "தின்னவேலித்" தெரு
இதில் உன்னைப் புரிந்து கொண்டு
நான் தனியே செல்கிறேன்....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனத்துள் துயரம்

நா.நாமகள்

அம்மா...
நீ மௌனமாய்
இருப்பதேன்...?
கண்ணும் கருத்துமாய்
காத்த உன்மகள்
களம் நோக்கிச் சென்று விட்டாள்
என்ற கலக்கமா...?
அல்லது...
உன் பிள்ளை
போரில் வென்று
வெற்றி வாகை சூடி வரும் வரையும்
மௌன விரதமோ
சொல்லம்மா.
அப்படியாயின்,
உனக்கு பெருமையம்மா.

களம் குதித்த
உன் பிள்ளை
களமாடிக் கயவனை வென்று வருவாள்
"சீறிவரும் சன்னங்களிற்கிடையிலும்"
தனித் தமிழீழம் வெகுவிரைவில் வேண்டும்,
உன் வீரப் புதல்வியின்
ஆகுதியால்
நாளை தமிழீழம்
உருவாகும்.

போராட்டச் செடியில் பூத்த
புதுமலர் உன் பிள்ளை,
வருகின்ற தமிழீழத் தடாகத்தில்
உன் பிள்ளையின்
முகம் துலங்கிடும்
உனக்கு விடிவு பிறக்கும்.
நீ மௌனமாய் இருந்து விட்டால்
ஈடேறுமா....?

உன் பெற்ற கடனை
தீர்த்துவிட வேண்டும்
மௌனமாய்
இராதே,
மௌனத்திற்குள்
துயரம் கொள்ளாதே.
விழித்தெழுந்திடம்மா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்போது விடியும் என் இரவு

செந்தணல்

வெளியே...
பனித்துளிகள் இலைத்துளிகளில்
பட்டுத் தெறிக்கின்றன.

உன் உள்ளேயோ
ஆறாத பெருந் தணலின் வெப்பம்
அணுவணுவாய் எனைத் தீய்க்க
வெந்து உருகுகிறேன்
நித்தமும்...
எப்போது விடியும் என் இரவு?

இந்த நான்கு சுவர்களுக்குள்
சிலுவை சுமப்பது
நான் மட்டுமல்ல
ஆணியிலறையப்பட்ட
என் உணர்வுகளும் தான்...
எப்போது விடியும்
என் இரவு?

மாற்றமெதுவுமின்றி புலரும் காலைகளும்,
தோலைத் துளைத்து
உயிரைச் சில்லிட வைக்கும்
கொடும் பனியினூடு நகரும்
எனது இரை தேடும் பயணமும்...
எப்போது விடியும் என் இரவு?

நினைவில் வந்து நிழலாடும் - என
வயோதிப அன்னையும்
மாலைக்காய் காத்திருக்கும்
முதிர்கன்னியரான சகோதரியரும்...
நட்சத்திரங்களை வீட்டினுள்
இருந்தவதறே எண்ணவல்ல எம்
மாற்ற முடியா வறுமையும்...

நித்தமும் வேகுகிறேன்
வெந்து நோகின்றேன்...
எப்போது விடியும் என் இரவு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கிராமத்தின் எச்சங்கள்

சுதாமதி

சுழற்சியோடு நகரும்
ஒளிப்பிளம்பு வீச்சுக்கள்
நடு இரவின்
உறக்கத்தைக் கலைத்தபடி.
பயம் உறைந்து
இரவு நகரும்
நேற்றைய பொழுதில
எம்மோடிருந்த
உறவுகளின்
தொகை மெலிந்து
மேய்ச்சல் நிலத்தின்
அடிவேர்கள் போன்று - இன்னும்
வாழ்க்கையின்
எச்சமாகிப் போன தடயங்கள்.
இம்முறையும் சோளகம்
சுழன்றடித்தது.
ஆனால்
பட்டம் விடப் பறந்து வரும்
பிஞ்சுகள் வருவதில்லை
முன்பு விட்டம் போடும்
அந்த ஒற்றைப் பனை
வட்டுக் கருகி வீழ்ந்து போனது.

இன்னும் அந்த வைரத்தில்
ஈயக் குண்டின்
சன்னக் கிளிப்பு
அழமாய்...
என் வீடு ஒற்றையாய்
ஓரச்சுவர்கள் வெடித்தபடி...
சிறை மீட்கவரும்
ராஜகுமாரனை
எதிர் நோக்கியதான
மௌனமான
துயரத்துடன்,
நீர்த்தடங்கள்
மறையாத
பசிபடர்ந்த
படிக்கற்களுடன்
காத்திருக்கிறது.
ஒட்டைகள் கற்றி
ஒற்றையாய் கருகிய மாலையில்
என் அப்புவும் ஆச்சியும்
இன்னும் சிரித்தபடி சட்டகத்துள்
வாழ்ந்து மறைந்து போன
சாட்சியாக....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அகத்தின் பாடலிது

அலையிசை

கூடு கட்டி
கஞ்சு பொரிக்கும்
கனவுகளிடை
மலர்ந்த
உயிர் காணாமல் போன
தூக்கங்களோடு
உருவினை
நினைத்திருக்கும்
என் அகத்தின் பாடலிது

சன்னதங்கள்
உருப்பெற்று
சந்தங்கள் ஓயாது
எதிரொலிக்கும்
ஓர் பொழுதில்
உயிர் மறைந்து போனது

அந்த நாளில் புதினத்தை
அறிமுகப்படுத்திய தாள்களில் - எல்லாம்
அவர்களைப் பற்றிய தரவுகளே அதிகமாகின

அகவைகள் மிகையொலி வேகத்தில்
மூப்பெய்த
அவர்கள் சிறகுவிரித்திருந்தார்கள்
தமக்கான நோக்குகளில்
ஒளி பொருந்தியிருந்தார்கள்.

உயிரின் செயல்கள்
அவர்கள் மனங்களிடை
பத்திரப்படுத்தப்பட்டுள்ளது.

மௌமாக என்
மன இடுக்குகளில்
பதியப்பட்டுள்ள உயிரின்
உணர்வுகளோடு
ஒன்றிப்போக
வாழ்வு நகர்கிறது.

இமைப்பொழுதிலும்
ரணமாகும் உயிரின்
நிதர்சனத்தை
என் அகம் பாடலாக
என்றுமே
இசைத்துக் கொள்ளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வையகம் வசப்படட்டும்

தமிழவள்

வெறும் உயிர் நீளல்களாய்
வாழ்வு நகர்கிறது
அடுப்பும் கரியும்
உணவின் சுழவயும்
கொண்டவன் நலனும்
என்றான வாழ்வே
விதிக்கப்பட்டதாய் அன்றேல்
சபிக்கப்பட்டதாய்...

ஆழ வேரோடி பாறை இடுக்கூடே
ஊற்றுத் தேடியும்
ஆளமை இரக்க,
மேல் மணற் பரப்பில்
வேரினை பரத்தி
வானம் பார்த்தே
ஆயள் வளர்க்கும்
வண்ணச் செடியனெ
வாடும் வாழ்வே
வரமென்றானதா?

பெண்;
பெண்ணாக வாழ்தல்
எத்தனம் மிகுந்ததாய்...
சாதனைக்குரியதாய்...
ஏனிந்த அவலம்?
எவர் செய்த சூழ்ச்சி?
மகனாய்
தாரமாய் தாயாய்
முகமூடி அணிந்து
மூச்சுக்காய் தவித்து...

முகமூடி சுழற்றி
மழுமையாய் சுவாசிக்க
ஆசைகள் எழுந்தாலும்
அடக்கிஅ டக்கி
ஆழ்மனத் தொடுக்கி...
போதுமம்மா போதும்
நாடகமேடை வேடங்கள் போதும்
பெண்! பெண்ணாயிருந்தல்
அஃதென்றும் பாவமில்லை
நீ நீயாயிரு
நீ உனக்காயிரு
பூட்டுடைக்கும் வித்தை
கொஞ்சமேனும் புரிந்து இரு
ஜன்னல் காற்றோடு
திருப்திகள் வேண்டாம்
வாசல்கள் திறந்து
முழுமையும் உனக்காக்கு
சுதந்திரமாய் சிந்தித்தல்
சுதந்திரத்தை நேசித்தல்
சர்வதேசக் குற்றமன்று
பெண்ணே! உன்னை யோசி
உன்னை நேசி
வையகம் உந்தன்
கைகளில் வசப்பட
உனக்காய் யோசி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மௌனமாகி
என் மனத்தோடு வாழும்
நிதர்சன முகங்களின்
அகங்கள் இவை.
வடிவங்களற்ற மனங்கள்
எடுத்துரைத்தவைநெல்லாம்
துயர் குமுழிகளே!
வெற்று வார்த்தைகளின்
சத்தமற்ற ஒலிகள் கூட
எனை ரணப்படுத்துபவை தான்.
குருதி பெருகி,
சீழ் வடிந்து,
சிதிலமான
என் மௌனான்மா
எங்குமே புலப்படாத
நுண்ணிய ஒளிக் கசிவிற்காய்
காத்திருந்த பேதெல்லாம்
இருளுறைந்த பெருவெளிகளையே
முகங்கள் காட்டின.
நிச்சயம் ஒளிக்கசிவு
எந்த பொட்டிற்கு
ஊடாகவும் கசியலாம்
எனும் நம்பிக்கையோடு நான்
நாளைகளிற்காய் சுவாசிக்கிறேன்.

# மௌன ஆன்மா

விண்ணரசி

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்திருப்பு

சோழநிலா

உன்னைப் பார்த்து நீண்ட நாட்களாகி விட்டது.
உனது குரலின் அன்பை அனுபவிக்க
ஏங்கித் தவிக்கிறது மனம்.
பாசம் நிறைந்த உன் பார்வைக்குள் நனையும்
நாளின் நினைவுகளில் கழிகிறதென் நிகழ்காலம்
கால நீட்சியில் உனது கோலத்தில்
எழில் கூடியிருக்கும் என்று நினைக்கின்றேன்.
இத்தனை காலப் பிரிவினால் நியும்
என்னைப் போலவே தவித்தபடி இருக்கலாம்.
நேரில் பேச வேண்டிய செய்திகளை
சுமக்கின்ற எங்களின் மனங்களின் சுமைகளை
மாற்றிக் கொள்கின்ற நாளின் வருகையை
எதிர்பார்க்கின்ற கணங்களின் கழிவுகள்
வருடங்களாக நகர்கின்ற பொழுதிலும்
தொடர்கிறது உனக்கான எனது காத்திருப்பு.
பேசிக்கொள்ள நேரமற்றதமாய்
உணர்வுமிக்க பொழுதொன்றில் சந்திக்கினும்
உனது கனிவான பார்வையே போதும்
இன்னும் ஆயிரம் ஆண்டுகள் காத்திருக்க
உன்னைப் பற்றிய கனவுகளில் வாழ்வதால்
வாழ்க்கையை இனிமை நிறைந்ததாய்
உணர்கிறேன்.
நானும், உனக்கான எனது கவிதையும்
வழமைபோலவே காத்துக் கொண்டிருப்போம்
எங்களது காத்திருப்பு ஒரு போதும் முடிவடையாது
ஏனெனில்,
நீ இல்லாமல் போய்விட்ட செய்தியும்
உன்னைப் போலவே இரகசியமானது
என்பதுடன் பெறுமதி வாய்ந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதுமைகள் அல்ல

மாதவி

மதக்கோட்பாடுகள்
பழைய சம்பிரதாயங்கள்
பதுமையாக என்னை
இத்தனை நாளும்
வீட்டினுள் அடங்கி இருக்க வைத்தன.
அடக்கம் மனதைப் பொறுத்தது
அது எனக்குத் தெரிந்திருந்தது
ஆனால் என்னை ஒடுக்கியவர்களுக்குத்
தெரியவில்லை
என்னைப் போலவே என் அயலவளும் இருந்தாள்

அன்றொருநாள்
அராஜக அரசியலின்
ஏவற் பிசாவுகள்
திறந்த வீட்டில் நுழையும் நாய்போல்
அவள் வீட்டுள் புகந்தார்கள்.
தனிமையாக இருந்தவள்
வெறிநாய்கள் கையில்
குதறாமலா...? அவர்கள்...?
அடக்கப்பட்டே வாழந்தவள் அவள்,
அதானல், துணிவு ஆம்
அவளிடம் இருக்கவில்லை.
முடிவு... சமுகத்தின் பார்வையில்
அவள் கற்பிழந்தவள்.
பெண்களை கொன்ற போது
பதுமைகளாக நாம்,
அவர்களை வதைத்த போதும்
அவ்வாறே தான்.
போராட்டத்தில்
வதையும் மரணமும்
தவிர்க்க முடியாதன என்று
அன்று நாம் அப்படி...
ஆனால்,
அற்ப பொருாளக மதிக்கப்பட்டு
பெண்கள் அலங்கோலப்படுத்தப்பட
ஆரம்பித்த பின்

இனியும் பதுமைகாளகவா...?
எம்மை பெண்காளக
இராணுவம் வதைக்கட்டும், கொல்லட்டும்
மகிழ்ச்சியுடன் எம் மண்ணுக்காக
மரணத்தை தழுவுவோம்
ஆனால் அற்ப பொருளாக மிதிக்கப்பட்டபின
பதுமைகள் பெண்களானோம்.
பண்பாடு தெரிந்து கொண்டோம்.
எமக்காக மட்டுமல்ல,
எம்மண்ணின்
மீட்சிக்காகவும்
இனி எம் போராட்டம் தொடரும்.
அதற்கு மன்
வீட்டில் எமக்கெதிரான
அடக்கு முறையாளருக்கு
நாம் பதுமையோ
அடிமையோ அல்ல
என்பதை
துணிவுடன்
பிரகடனப்படுத்தப்
போகிறோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றை நாளில்
எல்லோரையும் போல்
அவனும் ஒரு-போராளி
நோயாளி-எனக்கு..!

மென்மையும் குறும்பும்
அவனது கண்களின்
கொடை!
வீரமும் துணிவும்
அவன்
இலட்சியப்பாதை!

தமிழும்-தன்
நாடும்-அவன்
உயிரின் மூச்சு!

ஊர் தூங்கிப் போன-
ஓர் நாளில்
குருதி குடித்திருந்த
கட்டுதுணியுடன்-எம்
மருத்துவ மனை
..புகுந்தான்
......!!!
கூடவே என்
தோழனுமானான்

ஈராறு தடவைகள்
விழுப்புண்கள்
சுமந்தும்

மீள உயிர்வாங்கி
போர்களம்
மீண்டவன் அவன்..!

சுடலைக் குருவியும்
துக்குறிகளும்-அவன்
துணிவு கண்டு
அஞ்சிப் போனது!

வெளவால்களும்
ஆந்தைகளும்
அலறத்தொடங்கிய
பொழுதொன்றை - மேவிய
சன்னங்களும்
இடப்பெயர்வுகளும்
தூங்கவிடாது
எழுப்பியது
அவனை..!

விழுப்புண்ணின்
வேதனையை
நெஞ்சு மையத்தில்
ஒழித்து எழுந்தான்

பச்சை புண்
காயும்-முன்பே
சத்தமின்றி -தன்
ஒற்றை செருப்பை
தேடிப் பிடித்து

# விடியலை நோக்கி

மிதாயா கானவி

விடிந்தும் விடியாத
காலைக் குளிரில்
விடை பெறுதலுடன்
நடக்க தொடங்கினான்..!

பின்னொரு நாளில்
எம் சத்திர சிகிச்சை
அறையில் - நுழைந்தது
அவன்
இல்லாத செய்தி மட்டுமே...


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஏக்கத்துடன் திரியும்
உங்கள் முகங்களைக்காண
எங்கள் இதயமும்
வலிக்கின்றது.
மூட்டைதூக்கி
மூன்றுகாசு உழைத்து
மரமேறி மாடாய்த் தேய்ந்து
உரமேறிய உங்கள் வியர்வையால்
நிலமேகிப் பயிர் செய்து
தேடிய தேட்டங்களில்
ஓட்டங்கண்டது
உங்களின் வாழ்க்கைப் பயணம்.
இப்போ சீரழிந்து கிடக்கும்
சொந்த வாழ்விடத்தைக் கண்டு
நொந்து போகும் உங்களுக்காய்
வெந்து உருகுகின்றோம்.
முகவரிகள் நிரந்தரமற்று
எத்தனையோ தற்காலிகங்களோடு
கழிகிறது உங்களின் தங்ககங்கள்
நம்பிக்கையோடு செல்லுங்கள்
எரிவைத் தாங்காத தங்கம்
பிரகாசமாய் ஒளிர்வதில்லை.
வலிகளை வாழ்வாக்கியது தான்
எங்களின் வரலாறு.
ஓடோடிச் சென்று ஊர் மீட்டு உங்கள்
காலடிக்கு வருவோம்.
வெல்லுகின்ற நாள் வரும்
உங்கள் உள்ளங்கள்
மகிழ்வு பெறும்

# ஊர் மீட்டு வருவோம்

புரட்சி நிலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐம்புலன்களையும்
அணைத்திடும்
குளிர்
அண்டமும் அதிர்ந்திட
அருகினில் "ஷெல்" வெடிக்கும்
சருகு வீழும் ஓசைதனை
சத்தமின்றிக் காது கொள்ளும்
அடர்ந்த இருள்தனை
ஊடறுத்துக் கண்கள் நோக்கும்
கரத்தினுள் இறுகுண்ட கடுகலனது
கண்ணியமாய்
புன்னகைத்து
கடமை செய்ய காத்திருக்கும்
இரும்பான போதினிலும்
அதற்கும் உணர்வுண்டு
இன மொழி பாராது
தன்கடமை சிரமமின்றிப் புரியும்
ஐந்தறிவுடன் பகுத்தறிவும்
பெற்றிட்ட மானிடனே!
உனக்கு மட்டும்
உணர்வுவால் எப்போது?
சிறுமையைக்
களைந்துவிடு
களத்தினில் காவல் செய்யும்
கன்னியரை நினைத்துவிடு
வரலாற்று ஏடுகளில் நிலைத்திட
வழிகாட்டியாய் நீ வாழ்ந்துவிடு

# உணர்ந்துகொள்

பொன்னிலா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசத்திற்காகவே
தேகம் உருக்கிய
உத்தமர்களே
நீங்கள் சென்ற பாதை
கொடியது.
ஆனால் உன்னதமானது,
உறுதியானது.
உங்கள் பாதங்கள்
தடம்பதித்த
அந்த புனித மண்ணிலிருந்து - இன்று
ஆயிரம் ஆயிரம்
வேங்கைகள்
துளிர்த்தெழுந்து
நிமிர்ந்து நிற்கின்றனர்
அவர்கள் நாளை
நிச்சயம் உங்கள்
கனவுகளை,
நினைவுகளை
நிறைவேற்றுவர் - நீங்கள்
நிம்மதியாய்
உறங்குவீர்கள்.

# நிச்சயம் இது நிலைக்கும்

புதியவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நள்ளிரவில்
வல்லூறுகளின்
சுவடுகள்
கிராமத்தை வளைத்தன
ஒருகணம் கண்ணயர
நரபலி எடுப்போன்
மனிதர்களை
காயப்படுத்தினான்.
என் விழிகளும்
குருடாகின.
ஆன்மாவை இறுகப்பொத்தி
சில நிமிடங்கள்
என்னில் மௌனப்போர்
பயங்கரவாதத்தின் சாயம்
எனக்கும்பூசுப்பட்டதல்லவா
என்னில் ஓடுவது
கலப்பற்ற தமிழீழ இரத்தமல்லவா
மறுநாள்
காணாமல் போன பட்டியலில்
நானும் சேர்க்கபட்டேன்.
காணமல் போன
எனது பெயரும்
விலங்கிடப்பட்ட எனதுகையும்
விடுதலைக்காய்
காத்திருக்கும்
பிரிந்த உறவுடன் இணைந்து.

# காத்திருப்பு

சமர்விழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய தோழி எம் பின்னால் வருகிறாள்

உதயலட்சுமி

ஊதற்காற்று உரசிக்கொள்ளும்
கரிய இருள்கவிந்த
கானகம்
அந்தரிப்புகளில் கழியும்
அடர் இரவுகள்
நினைவு மூட்டத்தில்
உங்கள் உருவங்கள்
விழித்திரையில் மோதும்;
நினைவுகள் பொங்கித் தணியும்.

ஆடிச்செல்லும் படகும்
உலர்ந்த கோடை வெயிலும்
மூசிக்கொள்ளும்சோளகக்காற்றும்
உங்கள் நினைவுகளை
மீட்டுச் செல்லும்.

உதிர்ந்து போன
இலைகளல்ல நீங்கள்
ஒரு உதயத்துக்காய்
உங்களை உருக்குலைத்த
உருக்கு மனிதர்கள்

காவல் நேரத்தில் மட்டும்
கண்விழித்துக் கொள்ளும்
உறவுகளின் நினைவுகளை
உதறித்தள்ளிவிட்டு
துப்பாக்கியை இறுகப்பற்றி
இலக்கைமட்டும் நினைத்த
இறுதிக் கணங்கள்...

நினைவுகளை மீட்டுப் பார்க்கிறோம்
வேதனைதாள முடியாமல்
விழிகள் நனைந்து கொள்கின்றன.

எங்கள் வரலாற்றுக்கு
வழிகாட்டும்
தலைவனின் வார்த்தைகளை
இதயத்திற் பதித்தபடி
இறுதியாக களத்திற்கு
நடந்தபோது
உமதுபாசறைகளில் படிந்த
உங்கள் பாதச்சுவடுகள்
இன்றும் அழியாதபடி
மனதிற் பதிந்து போன
ஓவியங்களாய் நீங்கள்...
எப்படி நினைத்துக் கொள்வோம்
நினைவுகளாக மட்டுமா நின்றீர்கள்?

நேற்று வந்த புதிய தோழிகளின்
கரங்களிலே தவழ்கின்ற
உங்களின் "தோழமை"
உறுதியான பற்றலுடன்
ஆயத்தமாகும்
மிகுதிப் பயணங்கள்...

விழிசுமந்த உங்கள்
கனவுகளைச் சுமந்து
வழிவமீது நடக்கிறோம்
புதியதோழி எம் பின்னால் வருகிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்பு
நாலு நாளோ
நாலு யுகமோ
பேசிப் பழகிப் புரிந்து
கொண்டால்தான்
வருமென்று
இப்போது நான் நினைக்கவில்லை.
ஏனென்றால்
யா சோலிக்கும் போகாமல்
தானும் தன் பாடுமாக
ஆற்றலுடன் இயங்கும்
யாரைப் பார்த்தாலும்
எனக்கு நேசம் வருகிறதே.
எதையும்
கதைக்கலாம் போல்
இருக்கிறதே
அவர்களுக்காக
ஏழுமலை கடந்து
ஏழுகடல் நீந்தவும்
மனம் துணிகிறது.
ஒரு முறை கூட
ஒருசொல்தானும்
பேசியதில்லையே
பின் எப்படி இருப்படி?

நிதானம், நேரான பார்வை,
அலட்டிக் கொள்ளாத தன்மை,
இயல்பான பேச்சு,
பெரிய மனது,
மனிதம்
இவைதான்
என்னை அவர்களிடம்
ஈர்த்திருக்க வேண்டும்.
இத்தனையும்கொண்ட மனிதர்கள்
என்னிலிருந்து
எத்தனை ஒளியாண்டுகள்
தொலைவிலிருந்தாலும்
உடனேயே
என் நேச சாம்ராஜயத்துக்கு
வருகை தரக் கடவது
உங்களுக்காக
என் சிம்மாசனத்தின்
சரியாசனங்கள் காத்திருக்கின்றன.

# நேசராச்சியம்

மலைமகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமிப்பந்தின்
புவியீர்ப்புக்கு அப்பால்
பிரபஞ்ச வெளியையும்
பிய்த்துச் சென்றது
மீண்டும் ஒரு
வெடி அதிர்வு

கர்வப்பட்டுக் கொண்டிருக்கும்
கண்களெல்லாம்
கண்டுபிடிக்கட்டும்
அவர்களது
கடுகளவு உடற்கூற்றை
பெருமையோடு
உரிமை கொள்வோம்
இவர்கள் தாம்
மானுடத்தின் தோழரென்று

ஆராய்ச்சி யாளருக்கெல்லாம்
ஓர்
அவரை வேணடுகோள்
உங்கள்
ஆராய்ச்சிக் கூடங்களில்
இந்த
அர்ப்பணிப்புக்களை ஆராயுங்கள்,

தானைத் தலைவனின்
பாசப்பகிர்வின்
பாதி இரவும்
செழுவாகக்கழிய

கரியஇருளில்
காற்றோடு காற்றாய்
கரைந்து போனதை
கடைசியாகக் கண்டதும்
நீதானே?
வெடிமருந்துப் படகோடு
இவர்களுக்களித்து
இறுதியாக
................
...............

உன்னுடையது தானே?
அன்னையை விட
அவர்களை
அதிகமாய் அணைத்தது
நீ தானே?

அதனால் தான்
உன்னிடம்
உரிமையோடுகேட்கிறோம்
கடலலையே
நீ
கரையைத்தொடும்போது
களம்மக்களுக்கு
காதோடு சொல்லி விடு
“விடுதலையை வென்றெடுங்கள்
அப்போது அவர்கள் வருவார்கள்”
என்று

# கடலலையே நீ கூறு

பாரதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணீர் நீந்துகின்ற
மீன்கள் நாம்
தாகத்திற்குத் வெந்நீரா
கேட்டு நிற்போம்

மண்ணின் விடியலுக்காய்
வான்கீறுப் புறப்பட்டோர்
சுதந்திரச் சூரியக் கதிராகி
விளைநிலத்தில்
வீரம் வினைக்கின்றோம்

கண்ணக்கல் நடுகல்லாய்
நித்தியமும் செவ்வணக்கம்
பழக்கும் நாளையசுதந்திர
தேவிக்கு கையெடுக்க; தலைசாய்க்க

மதுகரனின் மன்மதக்கரங்கள் தீண்டிய
தீட்டை நீக்க நீரில் அலம்பும் - கரங்கள்
கல்விப் பெருக்கால் சுரந்ததேனால்
அபிஷேகங்கள்செய்யலாமோ?

மலரின் இதழ்கள் சுடுவதுண்டு
மன்மதபாணம் இறைத்தலுமுண்டு
இரண்டும் வேறு வேறல்ல
நாளை புலரும் ஞால விழிப்புக்காக

# நாமும் நாளையும்

அநாமிகா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்குது பொங்குது பொங்கலும் பொங்குது
தமிழர் இதயத்தில் வேதனை பொங்குது
வேதனை மீறியே ஆத்திரம் பொங்குது
ஆத்திரம்கொண்ட நாம்எடுப்போமே சபதம்

சாதிக் கொடுமையை சாகடிப்போம்
சமத்துவத்தைப் பறை சாற்றிடுவோம்
சமதர்மநெறியினை ஏற்றிடுவோம்
சகலரும் ஒன்றாக கூடிடுவோம்

இனவெறியும்தமிழினக் கொலையும்
இலங்கையின் இன்றைய இலட்சியமாம்
இரத்தம் குடிக்கும்இடும்பர்களை
இல்லை இனி என ஆக்கிடுவோம்

போதனை செய்வது பெண்ணின் பெருமை
சாதனை செய்வது பெண்ணடிமை கொள்ளலில்
வேதனை கொப்பது இந்தமடமை
இதனைக் கொய்வது எங்கள்கடமை

மீனவர் எமக்கோ கடலில் வதைப்பு
மலைநாடடில் போக்கவே போரில் குதிப்பு

# எடுப்போமே சபதம்

கிருபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தமிழ் அனையிவள்
மண்ணடிமை நீக்க வேண்டும்
மறத்தமிழர் மனங்கொண்ட
மயக்க நிலை போக்கவேண்டும்
கண் ணதுவாம் நாட்டின்
குழந்தைகள் நன்று
குதூகலித்து இருக்க வேண்டும்
எண்ணமிது இரவுபகல்
வட்டமிட,

நாட்டங் கொண்டுளம்
வேட்டைக் களம் சென்று
வேட்டுக்கள் தீர்க்க நானும்
விரைந்திட்டேன் விருப்புடன்

விரைந்து தான் என்ன பயன்?
விரைந்து தான் என்ன பயன்
நடந்து போன பாதையில்
விரிந்து கிடந்த சகதியில்
வீழ்ந்திட்டென் - தவறியல்ல
சுத்திவரச் சகதியென்றால்
எட்டி அடி வைப்ப தெங்கே?

புரண்டு புரண்டு எழுகின்றேன்
புரவியும் போகுமாஇதனூடே?

ஆவிதனைக் கொடுத்து
ஜீவிக்கின்ற,
தியாக நட்சத்திரங்களைக் கண்டு
தொட்டுப் பார்ததொரு சேதி
சொல்ல நினைத்தேன்.
ஆனாலும் சன்னி எந்தன
நினைவுகள் நிறைவேறாக் கனவுகளே
முக்கிளிக்கின்றேன் ஆனால்,

மூச்சு விடுகின்றேன்
ஏனென்றால்
சகதியிது மண்ணும்நீருமல்ல
குப்பையும் கூழமுமல்ல
கண்ணீரும் கட்டுப்பாடும்
ஆசைகளும் பாசங்களும்
சுயநலங்களும் சரண்டல்களும்
அடக்கு முறைகளும் அதிகாரங்களும்
நிறைந்திட்ட அகழி

ஆனாலும் ஒன்று
கோட்டைத் தாண்டவும்
கோட்டை ஒழிக்கவும்
வேட்டைக்களம் சென்று
நாட்டைக் காக்கவும்
என்னொருத்தி ஆசையில்லை
இந்தச் சகதி என்ற
சமுதாயத்துள்ளே பூத்திருக்கும்
எத்தனையோபூக்களின்
ஆசையிது.
இத்தனை பூக்களும் - ஒன்று
கூடிச் சுவாசிக்கையில்
வீசும் வெம்மையால்

# அர்ச்சனைப் பூக்களின் ஆசைகள்

பல்லவி

சுற்றியிருக்கும் சகதி
நிச்சயம் ஒர் நாள்
வற்றும்!
வறளும்!
பாளம் பாளமாய் வெடிக்கும்!
அப்போது அவற்றின் மீதும்
அப்பாலும்
நடப்போம் நமது பாதையில்
இப்போது மட்டும் அரக்கனின்
காலடியில்
அர்ச்சிக்கப்பட்ட பூக்கள் நாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவன் ஒருவனே கதாநாயகன்

பிரபா அன்பு

அவனென சுருக்கிவிட்டது
என்னுலகம்
தூக்கணாங் குருவிக் கூட்டைப்போல்
ஒய்யாரமாக ஆடி அசைகிறது
அவனின் நினைவுகள்
கனவுகளில் எழுதும்
கவிதைகளில்கூட
அவனேதான்
கதாநாயகனாய்
அமர்கிறான்
இதென்ன விந்தை
தித்திக்கப் பேசுகிறான்
குறும்புத்தனங்கள் புரிகிறான்
அத்தனை நேசத்தையும்
அள்ளி வீசுகிறான்
அதனால் தானோ
என்னவனின் இருப்பே
மற்றோர் உள் நுழைய முடியாமல்
தடுப்புச்சுவராக இருக்கிறது
அவனின் நிழல்தேடி அலையும்
ஆதி மனிசியாய் நான்
வேப்பங் கசப்பாய்தான்
அவனில்லா இவ்உலகம் சூல் கொண்டு
அசைகிறதெனக்கு

பட்டாசு சத்தம் கேட்டாலும் அன்று
அவன் களத்திடை நிற்கும்போது நான் தவித்த
கணங்கள்
நினைவுகளாய்
வந்து வதைக்கிறது

அடங்காப்பற்றிலே
காணாமல்
ஆக்கப்பட்டவனே
நீயெனக்குத் தந்து சென்ற
பரிபூரண அன்பால்தான்
ஆழ்ந்துறங்குகிறது
என் இதயம்
ஜென்மம் முழுவதற்கும்
நான் கண்டெடுத்த
பெரும் புதையல் நீயல்லவா..?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயவளை மீட்கவென்று

உலகமங்கை

கரிப்பு மணிகளின்
விளை நிலத்தினுள்
புதையுண்டு போன - எம்
கண்ணின்
மணிகளே
வந்து விட்டோம்
உங்கள்
மீட்பர்கள்
நாங்கள்
காத்திருக்கின்றோம் நாம்
உம்மருகில்
அம்மணியின் வசமுள்ள
எம் பொன்மணிகளைச் சிறைமீட்க
காத்திருக்கின்றோம் உம்மருகில்
அன்றொரு நாள் எம்முடன்
இதே வீதியால் நீங்களும் நடந்தீர்கள்
இன்று உங்கள்
புதைகுழிகளின் அருகே
மீண்டும் நடக்கிறோம்
பேய்களின்
சிதைவுகளின் மேல் நின்று - எம்
தாயவளைச் சிறை
மீட்போமென்று


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எனது பேனா!

## வானதி

எனது பேனா கூரானது!
எனது கைகளில் உள்ள
துப்பாக்கியைப் போல!

எந்த கலாநிதியுடனும்
எந்த வித்துவானுடனும்
எந்த பண்டிதருடனும்
என் கவிதை சவால் விடும்
ஏனெனில் - எனது போனவில்
உணர்வுகள் உயிருள்ளவை!

எமது உணர்வுகளை
கொச்சைப்படுத்தும்
சில பேனாக்களுக்கு
ஓர் வேண்டுகோள்!

முகவரி தாருங்கள்
உங்கள் முகத்திரையை
என்பேனா கிழிக்கும்!

எனது பேனா கூரானது!
எனது கைகளிலுள்ள
துப்பாக்கியைப் போல
எனது துப்பாக்கி எதிரியை மட்டுமே
குறி பார்க்கும் எனது பேனாவோ
எல்லாரையுமே பதம் பார்க்கும்!

எனது பேனாவின்
நினைவுகளின்
நிகழ்காலம்
நிகழ்வுகளின் எதிர்காலம்
புரியவில்லையா
என் கவிதைகளை
நீ புரியவில்லையா

இது எனக்கு கிடைத்த
வெற்றியல்ல!
எனது கவிதைக்கு கிடைத்த
வெற்றியுமில்லை
எனது பேனாவின் வெற்றிகள்
எனது கைகள்
நாளை ஓயலாம்
அன்றி... ஒடியலாம்
ஆனால்
எனது போனவோ
ஓயப்போவதில்லை
எமது துப்பாக்கியைப போல
மன்னார் அனுபவத்தின் பின்
எனது பேனா கூரானது
கைகளிலுள்ள
துப்பாக்கியையும் விட
எனது பேனா கூரானது.

எனது பேனா கூரானது
எனது கைகளில் உள்ள
துப்பாக்கியைப்போல

ஆனால் - துப்பாக்கி
சன்னத்தை மட்டுமே துப்பும்
என் பேனாவோ
சகலதையுமே கக்கும்!

எந்த போட்டிகளிலும்
கலந்து கொளடள- எனது
கவிதைக்கு அனுமதியில்லை
ஆனால் - எமது உணர்வுகளை
அவமரியாதை செய்து
அனுமதிவழங்கத்
தவறும் இடங்களில்
எனது பேனா
உத்தரவின்றி
உட்பிரவேசிக்கும்
பாராட்டுக்ளோ
அன்றிப் பரிசுகளோ
என் கவிதையை
பரவசப்படுத்துவதில்லை
ஏனெனில்
மிக உயர்ந்த பரிசும்,
மிக...மிக... உயர்ந்த
பாராட்டும் அன்று
என் கவிதைக்கு
பரிசுத்தமாய்
இருக்கிறது.

எனது பேனாவின்
நினைவுகளின்
இறந்த காலம்
நிகழ்வுகளின் நிகழ்காலம்,

பொது நூலகம் யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் என்றும் வெளிச்சம்

வெற்றிச்செல்வி

மேகங்களை ரசித்திருந்த
இரவுகளுக்காக ஏங்குகிறேன்......

காவலரண்களில்
காத்திருந்த காலங்களில்
உலாப்போகும் மேகங்களுடன்
உரையாடியதெல்லாம்
நேற்றைகளாகி விட்டன.

நேரம் கடந்து
முற்றத்தில் இருக்க
அம்மா அதட்டுகிறா

அல்லது அழுகிறா.

வீட்டுக்குள் வந்துவிடு
கதவை பூட்டிக்கொள்
நித்திரை வரேலயா
ஏன் தூங்கல

அம்மாவின் வினாக்கள்
என் இனிய இரவுகளை
பாழாக்குகிறது.

கிரீஸ் மனிதனும்
கள்ளனும்
காமுகனும்
அம்மாவின் மூளைக்குள்
நிரம்பி நிற்கிறார்கள்.
ஓ
மேகங்களே
என் அருமையான காலங்களை
மீட்டுத்தரும்
வர்ணக் கோலங்களே
என் வீட்டுக் கூரைக்கு மேல்

எனக்காக பவனிவரும் உங்களை
காண முடியாமல்
கதவடைத்துக் கிடக்கிறேன்.

மேகக் குழம்புகளாய்
வர்ணம் கொண்டெழுந்து
நிலவை அமிழ்த்தினாலும்
கீற்றுக்களாய்
தன் இருப்பை ஊடுகடத்தும் அழகு
கிழக்கு ஆகாயத்தில்
தெரியும் என்று நம்புகிரேன்.

# சோகம்

தமிழ்க்கவி

வன்னிக்கு வந்த வாழ்மானம் பெரிதெனினும்
சென்னிமேல் கைதூக்கி நாம்போற்ற முன்னின்ற
வீரமறவர்களின் விடுதலைப்போர் வரலாறு
ஈரமற்றுப் போகாதென்றுணர்.

கார்காலம் பொய்க்குமோ கடல் வற்றிப்போகுமோ
நேர்நின்றவீரம் நிழலற்றுப் போகுமோ- சீர் கொண்டு
வாழ்த்தினோர் வாழ்த்தி வாய்க்கரிசி போட்டோர்
ஆழ்மனதின் கனவாம் அது

பண்டார வன்னியனும் படைநடத்தி சென்ற உயர்
கொண்டாளும் வீரவன்னி மண்மீது வண்டாரும்
கூந்தல் மடமாதர் கூடிநின்று தேரிழுத்த
வெந்தணலால் வெந்த பெரும்காடு.

கட்டப் பொம்மனும் காரிகை ஜான்சியும்
துட்டர்களால் அழிந்து துவம்சமாய்போனாலும் - எட்டநின்று
இன்றுவரை மாவீரம் இவ்வுலகம் பேசுவது
குன்றா உறுதியினாலன்றோ..

வெற்றியின்றேல் வீர மரணமென சாற்றியோர்
பற்றினை விட்டு உயிர் துச்சமென நின்றதனால்- சுற்றிநின்ற
சொந்தமக்கள் படும்துயரம் சூழ்வினையால் என்பார்
எந்தவகை என்றறியார் மூடர்.

கடலில் ஒருதுளிநீர் கரையொதுங்கும் சடலத்தின்
உடலம் கண்டதில்லை காண்- விண்டுரைக்கின்
கரைசேரும் சடலத்தின் காரணத்தில் அதற்கும்
திரைகடலின் துளியதனால் பங்கு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவநதி வெளியீடுகள்*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org